பக்கங்கள் 19+ 03

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆடி 21 புதன்கிழமை 06.08.2025 | அதிர்வு 006

## இளைஞர்கள் இருவர் விபத்தில் உயிரிழப்பு



மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அநுராதபுரம், கலென் 04

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ இன்று கைது!

## ஓகட்ஸ் 19 ஆம் திகதி வரை விளக்கமறியல்

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரிக்கும் ஆணைக்குழுவால் இன்று கைது செய்யப்பட்டுள்ளார். அவரை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. 06

# படகு ஒன்றில் இலங்கைக்குள் அத்துமீறி வந்த 4 இந்தியர்கள்



## ஓகட்ஸ் 11 ஆம் திகதி வரை விளக்கமறியல்

(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

இலங்கைக் கடற்பரப்புக்குள் படகு ஒன்றில் எல்லை தாண்டி உட்புகுந்த 4 இந்தியர்களை எதிர்வரும் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் நீதி 06






### மக்களின் கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில்

# பெருமளவு பொலிஸாரின் பாதுகாப்புடன் மன்னார் நகரை வந்தடைந்த காற்றாலை மின் கோபுரங்களின் பாகங்கள்!

(மன்னார் நிருபர்
எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் – மதவாச்சி பிரதான வீதி, முருங்கன் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காற்றாலை மின் கோபுரப் பாகங்களுடன் காணப்பட்ட பாரிய வாகனங்கள் இன்று புதன்கிழமை அதிகாலை 2.30 மணியளவில் மக்களின் பாரிய எதிர்ப்புகளுக்கு மத்தியில் நூற்றுக்கணக்கான பொலிஸாரின் பாதுகாப்புடன் மன்னார் நகரை வந்தடைந்துள்ளது.

அந்தக் காற்றாலை மின் கோபுரங்களுக்கான பாகங்களை மன்னார் நகருக்குள் எடுத்து வரக்கூடாது என்ற கோரிக்கையை முன்வைத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு மன்னார் – தள்ளாடி சந்தியில் மக்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

அதனைத் தொடர்ந்து மறுநாள் திங்கள் மற்றும் செவ்வாய் ஆகிய தினங்களில் மன்னார் பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் மக்கள் போராட்டத்தை முன்னெடுத்து வந்த நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை மன்னார் – பஜார் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களை மூடி மன்னாரில் முன்னெடுக்கப்படவுள்ள 2 ஆம் கட்ட காற்றாலை மின் உற்பத்தி வேலைத்திட்டம் மற்றும் மன்னார் நகருக்குள் கொண்டு வரப்படவுள்ள காற்றாலை மின் கோபுரங்களைக் கொண்டு வர வேண்டாம் என்ற கோரிக்கையை முன்வைத்து போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

இந்தநிலையில் மன்னார் – மதவாச்சி பிரதான வீதி, முருங்கன் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள சுமார் 5 இற்கும் மேற்பட்ட காற்றாலை மின் கோரங்களுக்கான காற்றாலைகளை மன்னார் நகருக்குள் எடுத்து வர வேண்டாம் என்ற கோரிக்கையை முன்வைத்து மன்னார் – தள்ளாடி பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை இரவு மக்கள் கண்காணிப்புப் போராட்டத்தையும் மேற்கொண்டனர்.

அந்தப் பகுதியில் நின்ற மக்கள் அவ்விடத்தில் இருந்து சென்ற நிலையில் இன்று புதன்கிழமை அதிகாலை 2.30 மணியளவில் நூற்றுக்கணக்கான பொலிஸார் மற்றும் கலகம் அடக்கும் பொலிஸாரின் பாதுகாப்புடன் காற்றாலை மின் கோபுரங்களை ஏற்றிய வாகனம் மன்னாரை நோக்கிச் சென்றது.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் அங்கிருந்து சென்ற நிலையில் சிறிய அளவிலான மக்களே அந்தப் பகுதியில் நின்ற நிலையில் பொலிஸார் அவ்விடத்தில் நின்றவர்களை அச்சுறுத்தியதையடுத்து பலத்த பாதுகாப்புடன் மன்னாரை நோக்கி அந்த வாகனம் சென்றது.

இந்தச் சம்பவம் மன்னார் மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.








# நல்லைக்குமரன் 33 ஆவது மலர் இன்று வெளியிட்டு வைக்கப்பட்டது!

## ‘யாழ். விருது’ உயிரியல் ஆசிரியர் குணசீலனுக்கு

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாண மாநகர சபையின் சைவ சமய விவகார குழுவால் நல்லூர் கந்தனின் பெருந்திருவிழாவை முன்னிட்டு வெளியிடப்படும் நல்லைக்குமரன் மலரின் 33 ஆவது மலர் இன்றைய தினம் வெளியிட்டு வைக்கப்பட்டது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் இன்று (06) காலை 9 மணியவில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ். மாநகர முதல்வர் மதிவதனி விவேகானந்தராஜாவால் நல்லைக்குமரன் மலர் வெளியீட்டு வைக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாநகர சபையின் சைவ சமய விவகாரக்குழுவால் வழங்கி கௌரவிக்கின்ற யாழ். விருது இந்த ஆண்டு கோப்பாய் ஆசிரியர் கலா சாலை ஓய்வு நிலை விரிவுரையாளரும் உயிரியல் பாட ஆசிரியருமான சின்னத்தம்பி குணசீலனுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாநகர சபையின் சைவ சமய விவகார குழுவினரால் சைவத்துக்கும் தமிழுக்கும் சமூகத்துக்கும் தொண்டாற்றியவர்களைக் கௌரவித்து ‘யாழ்.விருது’ வருடாவருடம் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் யாழ். மாநகர ஆணையாளர் கிருஷ்ணேந்திரன், யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் கை.சிவகரன், வீணாகான குருபீடத்தின் பீடாதிபதி சிவஸ்ரீ சபா வாசுதேவக் குருக்கள், துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன், யாழ்ப்பாண பல்கலைக்கழக சட்டத்துறை தலைவர் திருமதி கோசலை மதன், மாநகர சபையின் சைவ சமய விவகார குழு உறுப்பினர்கள், மாநகர சபை உறுப்பினர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.











## இளைஞர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிந்துனுவெவ - யக்கல்ல பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கலென்பிந்துனுவெவ பகுதியை நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று செலுத்துனரின் கட்டுப்பாட்டை இழந்து வீதியில் கவிழ்ந்து இழுபட்டுச் சென்றதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளின் செலுத்துனரும் பின்புறத்தில் பயணித்தவரும் காயமடைந்து யக்கல்ல வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட பின்னர் இருவரும் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்கள் 20, 31 வயதுடைய கலென்பிந்துனுவெவ மற்றும் அங்குருவாதொட்ட பகுதிகளை வசிப்பிடமாகக் கொண்ட இளைஞர்கள் என்று பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

விபத்தில் உயிரிழந்த இருவரது சடலங்களும் யக்கல்ல வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் கலன்பிந்துனுவெவ பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.








# “சின்னஞ்சிறு கிளியே” சிறுவர் பாடல் இறுவட்டு வெளியீடு

சித்ரஷேய்திரா கலைக்கூடத்தின் ”சின்னஞ்சிறு கிளியே” சிறுவர் பாடல் இறுவட்டு வெளியீட்டு விழா யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணையில் நடைபெற்றது.

லயஞானி நல்லை க.கண்ணதாஸின் கவி வரிகளில் இசையமைப்பாளர் தேனிசையாளன் ஸ்ரீ குகனின் இசையில் அமைந்த பத்துப் பாடல்களின் தொகுப்பாக இந்த இறுவட்டு வெளியாகியிருந்தது.

இறுவட்டில் இடம்பெற்ற பாடல்களைச் சித்ரஷேய்திரா கலைக்கூடத்தின் இயக்குநரும் பண்ணிசைக் கலைஞருமான திருமதி சித்திரா ஹவிக்குமாரும் அவருடை மாணவர்களும் பாடியிருந்தனர்.

வெளியீட்டு நிகழ்வுக்கு ஊடகவியலாளர் இளங்கீரன் தலைமை தாங்கினார்.

நிகழ்ச்சியின் பிரதம விருந்தினராக இலங்கை வங்கியின் வடக்கு மாகாண பொது முகாமையாளர் வ.சிவானந்தன் கலந்துகொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக, கலா பூஷணம் தாவடியூர் கே.எஸ்.ஆர்.திருஞானசம்பந்தன், வடக்கு மாகாண ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் அ.இரவீந்திரன், மிருதங்க ஆசான் சங்கீதரத்தினம் மா.சிதம்பரநாதன் ஆகியோர் பங்குகொண்டனர்.



கௌரவ விருந்தினராக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் வி.பி.எஸ்.டி. பத்திரண பங்குகொண்டார்.

இறுவட்டு வெளியீட்டைத் தொடருந்து இசையரங்கும் இடம்பெற்றது.

நிகழ்ச்சியில் இசைக்கலைஞர்கள், ஆர்வலர்கள், மாணவர்கள் எனப் பெருமளவானர்கள் பங்குகொண்டனர்.

இந்த நிகழ்வு, வண்ணார்பண்ணை, நாச்சிமார் கோவில் காமாட்சி திருமண மண்டபத்தில் கடந்த 27 ஆம் திகதி பிற்பகல் நடைபெற்றது.















# 23 வயது இளைஞர் வெட்டிக்கொலை!

## 41 வயதுடைய சந்தேகநபர் கைது

இளைஞர் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று செவ்வாய்க் கிழமை நாவுல பொலிஸ் பிரிவின் நிகுல பகுதியில் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் தம்புள்ளை, கலுந்தாவை பகுதியைச் சேர்ந்த 23 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.

தாக்குதலில் பலத்த படுகாயமடைந்த




இளைஞர் நாலந்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில், பணத் தகராறு காரணமாக இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது என்று தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய நிகுல பகுதியைச் சேர்ந்த 41 வயதுடைய சந்தேகநபர்கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் குறித்து நாவுல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# இரத்தினபுரியில் வெடிபொருள்களுடன் வயோதிபர் ஒருவர் எஸ்.ரி.எவ்வால் கைது!

வெடிபொருட்களுடன் வயோதிபர் ஒருவர் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இரத்தினபுரி, இறக்குவானை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மெதகங்கொட பிரதேசத்தில் வைத்து மேற்படி வயோதிபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் இறக்குவானை பகுதியில் வசிக்கும் 78 வயதுடைய வயோதிபர் ஆவார்.

அவரிடமிருந்து 2 கிலோ 888 கிராம் கோடையிட், 9 கிலோ 597 கிராம் அமோனியம், 15 வோட்டர் ஜெல் குச்சிகள், டெட்டனேட்டர் 25 மற்றும் வெடிமருந்து நூல் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்துக் கைது செய்யப்பட்ட வயோதிபர் மேலதிக விசாரணைகளுக்காக இறக்குவானை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை இறக்குவானைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2022 ஆம் ஆண்டு நாடளாவிய போராட்டங்களின் போது தீக்கிரையாக்கப்பட்ட செவனகல – கிரிப்பன் வேவ பகுதியில் உள்ள அரச நிலத்துக்கு மற்றொரு நபர் மூலம் இழப்பீடு பெற்ற சம்பவம் தொடர்பாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ கைது செய்யப்பட்டார்.

இன்று காலை நுகேகொடையில் உள்ள அவரது இல்லத்தில் வைத்து அவர் கைது செய்யப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து அவர் இலஞ்ச, ஒழிப்பு ஆணைக்குழுவில் முன்னிலைப் படுத்தப்பட்டார்.

அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்ட பின்னர் அவர் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் இன்று பிற்பகல் ஆஜர்படுத்தப்பட்டார்.

அவரை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

### படகு ஒன்றில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இலங்கையின் கட்டுப்பாட்டுப் பகுதியில் நெடுந்தீவுக்கும் கச்சதீவுக்கும் இடையே பயணித்த இந்தியப் படகை நேற்று செவ்வாய்க்கிழமை இரவு வழிமறித்த கடற்படையினர் அதில் பயணித்த 4 இந்தியர்களைக் கைது செய்து நெடுந்தீவுக்கு அழைத்து வந்தனர்.மேற்படி 4 இந்தியர்களும் பயணித்த படகில் மீன்பிடி வலைகளோ அல்லது மீனோ காணப்படாதமையால் நெடுந்தீவுப் பொலிஸாரிடம் அவர்கள் ஒப்படைக் கப்பட்டனர்.

நெடுந்தீவுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட 4 இந்தியர்களையும் ஊர்காவற்றுறை நீதிவான் முன்னிலையில் எல்லை தாண்டிய குற்றச்சாட்டின் கீழ் பொலிஸார் இன்று ஆஜர்படுத்திய வேளை அவர்கள் நால்வரையும் எதிர்வரும் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் உத்தரவிட்டார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## உண்மைகள் வெளிவருமா?

இதற்கு முன்னைய ஆட்சிக் காலங்களில் இடம்பெற்ற ஊழல், முறைகேடுகள், மோசடிகள், தவறான ஆட்சி நிர்வாகம் போன்றவற்றுக்குக் காரணமானவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவோம் என்று கூறி அந்த வாக்குறுதியின் அடிப்படையில் அதிகாரத்துக்கு வந்த தேசிய மக்கள் சக்தி அரசு, இதுவரை இவ்விடயத்தில் குறிப்பிடத்தக்க எதையும் சாதித்ததாகத் தெரியவில்லை. 'தும்பை விட்டுவிட்டு வாலைப் பிடித்த கதையாக' அங்கொன்றும் இங்கொன்றுமாக சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அவ்வளவுதான்.

இதற்கு முந்தைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியின் கீழ் மதுபான உரிமங்கள் அரசியல் பிரமுகர்களின் பரிந்துரைக்கு அமைய வழங்கப்பட்டன என்றும், அந்தந்த அரசியல் பிரமுகர்களுக்கு அரசியல் லஞ்சமாக வழங்கப்பட்ட அந்த வாய்ப்பை அந்த அரசியல் பிரமுகர்கள் பல கோடி ரூபா பெறுமதி பணத்துக்கு விற்று, முறையற்ற விதத்தில் பணம் சம்பாதித்துக் கொண்டார்கள் என்றும் கூறப்படுகின்றது.

சட்ட ரீதியாக ஆவணப்படுத்தல் மூலம் இது நிரூபிக்க படாவிட்டாலும், இத்தகைய பெரும் மோசடி பெரும் எடுப்பில் நடைபெற்றமை பற்றிய விடயம் நாடு முழுவதற்கும் நன்கு தெரியும்.

இதில் சம்பந்தப்பட்ட சில அரசியல்வாதிகள் அம்பலமான போதிலும் யாரும் சட்ட ரீதியாக இந்தப் பெரும் ஊழல் தொடர்பில் சிக்கவில்லை. இந்தப் பெரும் அரசியல் முறைகேட்டின் சூத்திரதாரிகளை மடக்கிப் பிடிப்போம் என்று பிரதிக்ஞை செய்து அதிகாரத்துக்கு வந்த தேசிய மக்கள் சக்தி இவ்விடயத்தில் குண்டுச் சட்டியில் குதிரை ஓட்டிக்கொண்டு இருப்பதாகவே தோன்றுகின்றது.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா பதவியேற்ற கையோடு இந்த மதுபான சாலை உரிமங்கள் வழங்கியமை தொடர்பான கலால் திணைக்களக் கோப்புகள் யாவற்றையும் ஜனாதிபதி செயலகத்துக்கு தருவித்துக் கொண்டார் என்று செய்திகள் வெளியாகின. ஆனால் அதற்குப்பின் இந்த விசாரணையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதுவும் இல்லை.

இந்த முறைகேடு இடம்பெற்றதாக கூறப்படும் காலகட்டத்தில் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணியாள் தொகுதியின் பிரதானியாக இருந்தவர் சாகல இரத்நாயக்க. அவரே இந்த மதுபான சாலை உரிமங்கள் தொடர்பான பரிந்துரைகள் மற்றும் விவகாரங்களை கையாண்ட அதிகாரிகளின் நேரடியான தலைமைப் பொறுப்பாளராக இருந்தவர் என்று கருதப்படுகின்றது.

ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் கட்டமைப்பு அல்லது பணியாள் தொகுதி பதவியிலிருந்து விலகும் போது, மேற்படி மதுபான உரிமங்கள் தொடர்பான மேலதிக ஆவணங்கள், பரிந்துரைகள் தொடர்பான தஸ்தாவேஜுக்களை மூலக் கோவைகளில் இருந்து அகற்றி விட்டனர் எனவும் பேச்சு உண்டு.

ஆயினும் எந்தெந்த அரசியல்வாதிகளின் பரிந்துரையில் இவை வழங்கப்பட்டன என்பது பற்றிய தகவல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணியாள் தொகுதியின் பிரதானி சாகல இரத்நாயக்கவுக்கு முற்றிலும் தெரிந்திருக்கும் என்ற கருத்து மக்கள் மத்தியிலும் அரசியல்வாதிகள் மத்தியிலும் புலனாய்வாளர்கள் மத்தியிலும் உண்டு.

இப்போது இன்று நிதி குற்றவியல் விசாரணை பிரிவின் முன்னிலையில் ஆஜராகுமாறு கோரப்பட்ட சாகல இரத்நாயக்காவிடம் இந்த விடயம் பற்றியும் இப்போது விசாரணை நடத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மக்கள் அறிய இடம்பெற்ற பல கோடி ரூபா பெறுமதியான இந்த அரசியல் ஊழல் பற்றி இனியாவது உண்மைகள் வெளிவருமா என்பதுதான் மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.







# மன்னார் இளையோரால் முன்னெடுக்கப்பட்ட 'கருநிலம் பாதுகாப்பு' மண் மீட்புப் போராட்டம்!

(எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாவட்டத்தில் பல்தேசிய நிறுவனங்களின் இல்மனைட் கனிம மணல் சுரண்டல் களால் மக்களின் வாழ்விடங்கள் மற்றும் பூர்வீக நிலங்கள் அழிவடையும் அபாயம் காணப்படுகின்ற நிலையில் குறித்த நடவடிக்கைகளைக் கண்டித்து, மன்னார் மாவட்ட இளையோர் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த விழிப்புணர்வுப் போராட்டம் இன்று புதன்கிழமை (06) காலை 10.30 மணியளவில் மன்னார் நகரப் பகுதியில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்டத்தின் இயற்கை வளங்களில் ஒன்றாக மணல் உள்ளது. இந்த மணல், இல்மனைட் கனிமத்தை கொண்டிருப்பதால் உலகளவில் பெரும் கேள்வி உள்ளது. கடந்த சில ஆண்டுகளுக்கும் மேலாக ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த பல்தேசிய நிறுவனம் ஒன்று இல்மனைட் மணல் அகழ முயற்சித்து வருகிறது.

இதற்கான அனுமதிகள் இழுபறியில் இருந்த போதிலும் தற்போதைய அரசின் கீழ் அவை வழங்கப்படுவதற்கான சூழல் உருவாகியுள்ளது என்று தெரிய வருகிறது.

குறிப்பாக ஆஸ்திரேலிய நிறுவனம் அகழ்வுக்கான சூழலியல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை ஒன்றை சுற்றுச்சூழல் அதிகார சபையிடம் சமர்ப்பித்திருந்தது. இதற்கு சுற்றுச்சூழல் அதிகார சபை சாதகமான அறிக்கையை வழங்கியுள்ளது.

இதனைத் தொடர்ந்து பல்தேசிய நிறுவனங்களுக்கு மணல் அகழ்வதற்கான அனுமதி வழங்கப்படுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இவ்வாறு இல்மனைட் மணல் அகழப்பட்டால் அடுத்த 10 ஆண்டுகளுக்குள் மன்னார் மாவட்டத்தின் வாழ்நிலங்களுக்குள் கடல் நீர் உட்புகுந்து மக்களின் வாழ்விடங்களையும் பூர்வீக நிலங்களையும் அழித்து விடும் அபாயம் உள்ளது.

இந்த அழிவைத் தடுக்கவும், எமது பூர்வீக நிலங்களையும் மக்களின் இருப்பையும் பாதுகாக்கவும் 'கருநிலம் பாதுகாப்பு' என்ற கருப்பொருளுடன் மக்களை விழிப்புணர்வு செய்யும் போராட்டத்தை முன்னெடுக்க இளையோர் நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

இந்த நிலையில் குறித்த விழிப்புணர்வுப் போராட்டம் இன்று புதன்கிழமை (06) மன்னார் நகரச் சுற்றுவட்டப் பகுதியில் இடம்பெற்றது.

இதன்போது கலந்து கொண்ட இளையோர் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் விழிப்புணர்வு பேரணி ஒன்றை முன்னெடுத்தனர்.

பேரணி மன்னார் நகர சுற்றுவட்ட பகுதியில் ஆரம்பமாகி மன்னார் பொலிஸ் நிலைய வீதியூடாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை வீதியை சென்றடைந்தது.

அங்கிருந்து மன்னார் பொது விளையாட்டு மைதான வீதியூடாக மன்னார் நகர சுற்று வட்ட பகுதியைச் சென்றடைந்தது.

அதனைத் தொடர்ந்து கனிய மணல் அகழ்வுக்கு எதிராக ஜனாதிபதிக்கு அனுப்பும் வகையில் தபாலட்டையில் கையொப்பம் சேகரிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தின் ஒரு அங்கமாக விழிப்புணர்வு நாடகம், கையெழுத்து பெற்றுக் கொள்ளும் செயற்பாடுகள் நாளை வியாழக்கிழமை (07) இடம்பெறவுள்ளன. இறுதியில் மன்னார் மாவட்ட அரச அதிபருக்கு மகஜர் ஒன்று கையளிக்கப்படவுள்ளது.









# தேசபந்து விவகாரத்தைக் கையாண்டமை போன்று தமிழின அழிப்பு விவகாரத்திலும் அக்கறை தேவை!

## பன்னாட்டு நீதிவிசாரணையே தேவை எனவும் ரவிகரன் எம்.பி. வலியுறுத்து

(விஜயரத்தினம் சரவணன், பா.சதீசன் )

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் விவகாரத்தில் விசாரணைகளை மேற்கொண்டதைப் போல தமிழ் இனவழிப்பு, மனிதப் புதைகுழிகள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உள்ளிட்ட விவகாரங்களிலும் அதே அவரசரத்தையும், அதே வெளிப்படைத் தன்மையையும், அதேநேர்மையையும் உடனடி நீதியையும் ஏற்படுத்துமாறு வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

அதேவேளை பொலிஸ் சார்ஜன் உப்புல் கொல்லப்பட்ட விவகாரத்தில் வெலிகம பொலிஸ்மூலம் குற்றவியல் விசாரணை நடத்தப்பட்டது தவறு. வெளிப்படைத்தன்மையின் பொருட்டு வேறு ஒருவரை நியமித்து விசாரிப்பதே ஏற்புடையது என்றும் தெரிவித்துள்ளார்.

பிரதிப் பொலிஸ்மா அதிபர் குணத் தாவடு நிசாந்த சொய்சா வாக்கு மூலமளித்ததை இதன்போது சுட்டிக்காட்டிய நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், இதனைப்போலவே தமிழ் இன அழிப்பு, காணாமல் ஆக்கப்பட்டோர், மனிதப் புதைகுழிகள் உள்ளிட்ட விவகாரங்களுக்கும் உள்ளக விசாரணை தீர்வாக அமையாது எனவும் பன்னாட்டு நீதி விசாரணையே தேவை எனவும் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று (05) உரையாற்றும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

அரசியலில் பல ஈடுபாடும் மக்கள் மயப்பட்ட அழுத்தமும் இருக்கும் போது விசாரணைகளை தொடங்கி உரியவர்களை பொறுப்புக்கூற வைக்கும்



இலங்கை அரசின் திறனை அண்மைய விசாரணை அறிக்கை, அதாவது ரி.எம். டபிள்யூ தேசபந்து தென்னக்கோனைப் பதவியில் இருந்து அகற்றுமாறு கோரும் குற்றச்சாட்டுகளுக்கான காரணங்கள் தொடர்பில் புலனாய்வு மற்றும் விசாரணை செய்து அறிக்கையிடுவதற்காக நியமிக்கப்பட்ட விசாரணைக்குழுவின் அண்மைய இறுதி அறிக்கை பிரதிபலிக்கிறது.

இந்த நாட்டில் சிலருக்கே நீதியும் பாதுகாப்பும் உரிமைகளும் நிலைநிறுத்தப்படுவதோடு மற்றவர்களுக்கு நிரந்தரமான நியாயக்கேடும் அநீதியும் வழங்கப்படுவது வேதனையான உண்மை. இந்த விசாரணையும் அதையே சுட்டிக்காட்டுகிறது.

அதிகார முறைகேடுகளுக்கு எதிரான இப்படியான விரைவான விசாரணைகள், தமிழர்களுக்கு எதிரான இலங்கை அரசின் வன்முறைகள் சார்ந்து இந்த நாட்டில் நடைபெறுவதில்லை.

நூற்றுக்கும் அதிகமான எலும்புக் கூடுகளுக்குள் உறைந்துள்ள படுகொலைகள், இறுதிப் போரில் நம்பி உங்களிடம் ஒப்படைத்த எங்களின் உறவுகளுக்கான தேடல்கள், இறுதிப் போரிலே நிகழ்ந்தேறிய இனப்படுகொலைகள் உள்ளிட்ட ஈழத்தமிழ் மக்களுக்கு உங்கள் அரசுகள் ஏற்படுத்திய வன்முறைகளுக்கும் அதிகார முறைகேடுகளுக்கும் அதிகார வல்லாளுகைகளுக்கும் எப்போது விசாரணைகளை மேற்கொள் எப்படவுள்ளது? எப்போது நீதி கிடைக்கவுள்ளது?

தென்னக்கோனின் விசாரணையில் நடந்ததைப்போல எங்களுக்கும் – தமிழர்களுக்கும் அதே அவசரத்தையும் அதே வெளிப்படைத்தன்மையையும் அதே நேர்மையையும் உடனடி நீதியையும் ஏற்படுத்துங்கள்.

தொடர்ந்து வரும் அரசுகள் எங்கள் மீது இனப்படுகொலைகளையும் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பையும் கைக் கொள்ளும்போது எங்கள் மீது நீங்கள் மேற்கொள்ளும் இம்முறைகேடுகளை நீங்களே விசாரிப்பது முறையன்று. அது ஒருபோதும் எங்களுக்கான நீதியைத் தராது. செம்மணிப் புதைகுழி உள்ளிட்ட படுகொலைகளுக்கு நீங்கள் கொள்ளும் மௌனமே சான்று.

உங்களைச் சாராத, சர்வதேச தலையீடு கொண்ட சுதந்திரமான ஒரு விசாரணையை நாங்கள் கோருகிறோம்.

தமிழர்கள் மீதான வன்முறைகள் மறைக்கப்படுவதையோ நீதிக்கான காலங் கடத்தப்படுவதையோ எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ள இயலாது. உண்மை வெளிவரவேண்டும். நீதி வழங்கப்படவேண்டும். – என்றார்.

---

### முல்லைக் கடற்பரப்பில் சட்டவிரோதிகளின் அத்துமீறலைக் கட்டுப்படுத்துக

# காணாமல் போயுள்ள மீனவர் காணாமல் ஆக்கப்பட்டிருக்கலாம்

## ரவிகரன் எம்.பி. தெரிவிப்பு

(விஜயரத்தினம் சரவணன், பா.சதீசன்)

முல்லைத்தீவு – தீர்த்தக்கரைப் பகுதியிலிருந்து கடந்த ஜுன் மாதம் கடற்றொழிலுக்குச் சென்ற மீனவரான வின்சன்ரிப்போல் அன்ரனிகர்னல் என்னும் மீனவர் காணாமல்போயிருந்தார்.

இந்த நிலையில் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாட்டில் ஈடுபடுபவர்களால் குறித்த மீனவர் திட்டமிட்டுக் காணாமல் போகச்செய்யப்பட்டிருக்கலாம் என்று மீனவ மக்கள் சந்தேகிக்கின்றனர்.

இவ்வாறு தெரிவித்த வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், முல்லைத்தீவு கடற்பரப்பில் அதிகரித்துள்ள சட்டவிரோத கடற்றொழிலாளர்களின் அத்துமீறிய செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்தியுள்ளார்.

அதேவேளை முல்லைத்தீவு கடற்பரப்பில் இடம்பெறும் சட்டவிரோதிகளின் அத்துமீறல் செயற்பாடுகளை உரிய தரப்பினர் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்காமை தொடர்பிலும் நாடாளுமன்ற உறுப்பினர் இதன்போது கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவில் கடந்த 2025.06.19

தொடர்ச்சி▼

# காணாமல் போயுள்ள...

தொடர்ச்சி▲

அதிகாலை 02.30 மணியளவில் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற மூன்று பிள்ளைகளின் தந்தையான வின்சன் ரிப்போல் அன்ரனிகர்னல் என்பவரைக் காணவில்லை.

தனது குடும்ப வாழ்வாதாரத்துக்கே கடலுக்குச் சென்றுள்ளார். அவர் கடலுக்குச் சென்ற படகு மீட்கப்பட்டபோது, அதில் இரத்தக்கறை இருந்துள்ளது. படகும், படகின் வெளியிணைப்பு இயந்திரமும் சிறிய அளவில் சேதமடைந்திருந்துள்ளன.

படகில் இனங்காணப்பட்ட இரத்தக் கறையானது மனிதனுடையதென தடையவியல் நிபுணர்களாலும் உறுதிப் படுத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையில் காணாமல் போன குஅந்த மீனவர் கடலில் சட்டவிரோத தொழிலில் ஈடுபடுபவர்களால் தாக்கப்பட்டு காணாமல் போகச் செய்யப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் மீனவ மக்களிடம் உள்ளது.

முல்லைத்தீவுக் கடற்பரப்பு சட்ட விரோதிகளின் கைகளிலேயே உள்ளது. இரவில் இடம்பெறும் வெளிச்சம்பாச்சி மீன்பிடித்தல் செயற்பாட்டால் கடல் முழுவதும் பகல்போல் தென்படுகின்றது.

இவ்வாறு முல்லைத்தீவுக் கடற்பரப்பில் சட்டவிரோத செயற்பாடுகள் அதிகரித்துள்ள நிலையில், அந்தச் சட்டவிரோத செயற்பாடுகளைக் கட்டுப் படுத்த வேண்டியவர்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

கடற்படையினர், பொலிஸார், கடற்றொழில் நீரியல்வளத் திணைக் களம் உள்ளிட்ட தரப்பினரால் ஏன் இத்தகைய சட்டவிரோத செயற்பாட்டைக் கட்டுப்படுத்தமுடியவில்லை.– என்றார்.



# கொழும்பு மாநகர சபையின் நிலையியல் குழுவின் தலைவராக உறுப்பினர் கலீலூர் ரஹ்மான்

(றிபாஸ்)

கொழும்பு மாநகர சபையின் விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு தொடர்பான நிலையியல் குழுவின் தலைவராக ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் ஸ்தாபகரும் செயலாளருமான மாநகர சபை உறுப்பினர் கலீலூர் ரஹ்மான் தெரிவு செய்யப்பட்டார்.

இந்தக் குழுவில், ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் உறுப்பினர் உட்பட குழிவின் மற்றைய ஏனைய உறுப்பின ராக தேசிய மக்கள் சக்கியின் உறுப் பினர், பொதுஜன பெரமுன, ஸ்ரீலங்கை முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் சுயேட்சைக் குழு உறுப்பினர்கள் ஒருவரும் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்தக்குழுவில் எதிர்க்கட்சி உறுப்பி னர்களை அதிகம் நியமித்தன் மூலம் தேசிய மக்கள் சக்தி நல்லாட்சி, முன் மாதியான அரசியல் கலாச்சாரத்தை உருவாக்கியுள்ளது.

வாக்களிப்பின் அடிப்படையிலேயே பெரும்பான்மை வாக்குகளை பெற்று கலீலூர் ரஹ்மான் நிலைக்குழுவின் தலைவராக தெரிவுசெய்யப்பட்டார். அவருக்கு தேசிய மக்கள் சக்தி உறுப் பினர் துறுாவி, ரவீந்திரன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் அனாஸ், சுயேட்சைக்குழு உறுப்பினர் இமல்ஸ ஆகியோர் வாக்களித்தனர்.



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப் பினர் மஹேஷிகா வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப் பிடத்தக்கது.





# காட்டுப்புலம் இந்து மயானத்தின் அபிவிருத்திக் கலந்துரையாடல்

வல்வெட்டித்துறை நகர சபையின் ஆளுகைக்கு உட்பட்ட காட்டுப்புல இந்து மயானத்துக்கான அபிவிருத்திக்குழு தெரிவு செய்தலும், மயானம் தொடர்பான கலந்துரையாடலும் தவிசாளரின் தலைமையில் தொண்டைமானாறு கலை வாணி சனசமூகநிலையத்தில் நடை பெற்றது.

கலந்துரையாடலில் நகர சபையின் செயலாளர், நகர சபையின உறுப்பி னர்கள், நகர சபையின் உத்தியோ கத்தர்கள், கிராம சேவையாளர் மற்றும் பொதுமக்கள் பங்குபற்றினர். இந்து மயானத்துக்கான மயான அபிவிருத்திக் குழு தெரிவும் இடம்பெற்றது.

# சிறுவர் இல்லத்தில் இருந்து மீளிணைக்கப்பட்டோருக்கு உதவி

நன்னடத்தை பராமரிப்புக் கவனிப்பு சேவைகள் திணைக்களத்தால் சிறுவர் இல்லத்தில் இருந்து மீளி ணைக்கப்பட்ட பிள்ளைகளின் குடும்பத்துக்கு வாழ்வாதார ஊக்குவிப்பு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன், உதவிப் பிரதேச செயலர் திருமதி ச.குணஜா ஆகியோரால் காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டன.







# இந்தியாவிலிருந்து மீளத் திரும்பியவர்களின் சுமூகமான வாழ்வுக்கு உதவிகள் வழங்கல்

இந்தியாவிலிருந்து மீளத் திரும்பியவர்களின் சுமூகமான மீள் ஒருங்கிணைப்புக்கான உதவித் தொகை யாழ். மாவட்ட அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபனால் அரச அதிபர் அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டது.

நிகழ்வில் மேலதிக அரச அதிபர் க. சிவகரன், மேலதிக அரச அதிபர் (காணி) பா. ஜெயகரன், அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் ந. தயாபரன், அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி வைலட் நிக்லஸ் மற்றும் ஒவிர் மாவட்ட முகாமையாளர் திருமதி.எம். தர்சினி மற்றும் உதவித் திட்ட இணைப்பாளர் இ. பிரபாகர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன் போது இந்தியாவிலிருந்து மீளத் திரும்பியவர்களிடம் அவர்களின் வாழ்வாதாரம் மற்றும் கல்வி தொடர்பாகவும் அரச அதிபர் கேட்டறிந்து கொண்டார்.

ஒவிர் நிறுவனத்தால் தெரிவு செய்யப்பட்டு அந்த நிறுவனத்தால் இதற்கான உதவித் தொகை வழங்கப்பட்டது. ஒருவருக்குத் தலா 90 ஆயிரம் ரூபா வீதம் சண்டிலிப்பாய் மற்றும் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் மீளத் திரும்பிய 02 குடும்பங்களைச் சேர்ந்த ஐந்து பேருக்கு வழங்கப்பட்டது.



# உள்நாட்டுத் துப்பாக்கிகளுடன் குடும்பஸ்தர்கள் மூவர் சிக்கினர்

மூன்று உள்நாட்டுத் துப்பாக்கிகளுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் .

பொலனறுவை, அரலகங்வில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கஜுவத்த பகுதியில் மேற்படி 3 சந்தேகநபர்களும் நேற்று செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

அரலகங்வில பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட



சுற்றிவளைப்பின்போதே சந்தேகநபர்கள் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் அரலகங்வில ருஹுனுகம பகுதியை சேர்ந்த 31, 34 மற்றும் 39 வயதுடையவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மூவரும் குடும்பஸ்தர்கள் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அரலகங்வில பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



### பருத்தித்துறை மற்றும் உடுவில் பிரதேசங்களில்

# 14 ஆம் திகதி விசேட நடமாடும் சேவை ஒத்துழைப்புக் கோருகிறார் அரச அதிபர்!

பருத்தித்துறை மற்றும் உடுவில் பிரதேசங்களில் எதிர்வரும் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள விசேட நடமாடும் சேவையை மக்களுக்கு பயனுறுதி வாய்ந்த வகையில் வழங்க ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று அரச அதிபர் கோரிக்கை விடுத்துள்ளார்.

விசேட நடமாடும் சேவை தொடர்பான முன்னாயத்தக் கலந்துரையாடல் அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் அரச அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன் போது கருத்து தெரிவித்த அரச அதிபர்,

ஜனாதிபதி செயலகத்தின் 'கிளீன் ஸ்ரீலங்கா' செயற்றிட்டத்துக்கு அமைய, " இதய பூர்வமான யாழ்ப்பாணத்துக்கு – ஒற்றுமையின் தூய்மையான நெடும்பயணம்" எனும் கருப்பொருளிலான நடமாடும் சேவை எதிர்வரும் ஓகஸ்ட் 14 ஆம் திகதி பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பருத்தித்துறை, கரவெட்டி மற்றும் மருதங்கேணி ஆகிய பிரதேச செயலாளர்கள் பிரிவுகளை உள்ளடக்கிய வகையில் பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்திலும், 15 ஆம் திகதி உடுவில், தெல்லிப்பளை மற்றும் சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலாளர்கள் பிரிவுகளை உள்ளடக்கிய வகையில் உடுவில் பிரதேச செயலகத்திலும் நடைபெறவுள்ளது.

நடமாடும் சேவைக்கான முன்னாயத்த ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக, தாம் நேரடியாகக் கடந்த 02 ஆம் திகதி பருத்தித்திறை வேலாயுதம் மகா வித்தியாலயத்துக்கும் உடுவில் பிரதேச செயலகத்துக்கும் சென்று கள ஆய்வுகளை மேற்கொண்டு சம்பந்தப்பட்டவர்களுக்கு உரிய அறிவுறுத்தல்களை வழங்கினோம்.

மேலும் கொழும்பிலிருந்து 13 ஆம் திகதி ரயில் மூலம் அதிகாரிகள் வருகை தரவுள்ளனர்.

ஜனாதிபதி செயலகம், வடக்கு மாகாண சபை, மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் என்பன இணைந்து இந்த நடமாடும் சேவையை ஒழுங்குபடுத்தவுள்ளன. மக்கள் பயன் பெறும் வகையில் இந்த நடமாடும் சேவையை வினைத்திறனாக நடத்தி முடிப்பதற்கு அனைவரதும் ஒத்துழைப்பும் தேவை.

இந்த நடமாடும் சேவையில் ஆட்பதிவுச் சேவை, பிறப்பு இறப்புச் சான்றிதழ் வழங்கும் சேவைகள், ஓய்வூதியச் சேவைகள், வெளிநாட்டு வேலைவாய்ப்புச் சேவைகள், மோட்டார் வாகனப் பதிவுகள், கம்பனிப் பதிவுகள், சுகாதார சேவைகள், ஏற்றுமதிக்கான வாய்ப்புக்கள், வடக்கு மாகாணத்தின் சகல அமைச்சுகளுக்கும் உரிய சேவைகள், பிரதேச செயலகம் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு உரிய சேவைகள் உள்ளிட்ட சேவைகள் நடைபெறவுள்ளன.– என்றார்.

பொதுமக்களுக்கான போக்குவரத்து ஒழுங்குகள், மண்டப ஒழுங்குகள், குடிதண்ணீர் வசதிகள், நடமாடும் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ள ஆளனிகளின் எண்ணிக்கைகள் உள்ளிட்ட பல விடயங்கள் அரசாங்க அதிபர் அவர்களால் விரிவாக ஆராயப்பட்டு பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

இந்த முன்னாயத்தக் கலந்துரையாடலில் மேலதிக அரச அதிபர் க சிவகரன், மேலதிக அரச அதிபர் (காணி) . பா.ஜெயகரன், பிரதம கணக்காளர் எஸ் கிருபாகரன், பிரதம பொறியியலாளர் க. திருக்குமார், திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன், பிரதம உள்ளக கணக்காய்வாளர் . எஸ். ரமேஷ் குமார், உதவி மாவட்டச் செயலாளர் செல்வி உ.தர்சினி, நிர்வாக உத்தியோகத்தர் ஆ. சத்தியமூர்த்தி உள்ளிட்ட பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.



# தீவக மாணவருக்கு இலவச கல்வி கருத்தரங்கு ஊர்காவற்துறையில்!

(எஸ். நிதர்ஷன்)

தீவக மாணவர்களுக்கு இலவச கல்விக் கருத்தரங்கு முன்னெடுக்கப் பட்டது.

கல்விப் பொதுத் தராதர சாதாரண தர மாணவர்களுக்காக பிரபல சட்டத் தரணி தேவசேனாதிபதியால் வருடா வருடம் இந்தக் கருத்தரங்கு முன் னெடுக்கபட்டு வருகின்றது .

இதன் தொடர்ச்சியாக இந்த வருடத் துக்கான இலவச கல்வி கருத்தரங்கு ஊர்காவற்துறை பிரதேச செயலாளர் மண்டபத்தில் இன்று (06) காலை முதல் தீவக கல்வி வலய மாணவர்களுக்காக முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது மாணவர்களுக்கு இலவச புத்தகங்கள் வழங்கி வைக்கப் பட்டதோடு மங்கல விளக்கேற்றி மாண வர்களுக்கான இலவசக் கல்வி கருத் தரங்கு ஆரம்பித்து வைக்கப்பட்டது .

மேலதிக மாகாண கல்வி பணிப் பாளர் லாவண்ஜா சுகந்தன், தீவக வலய கல்வி அதிகாரிகள், ஊர்காவற் துறை பிரதேச செயலாளர் தயாரூபன், வளவாளர்கள், மாணவர்கள், ஆசிரியர் கள், பிரபல சட்டத்தரணி தேவ சேனா திபதி உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து யாழ்ப்பாணம் மாவட் டத்தின் ஏனைய கல்வி வலயங்களிலும் அதனை தொடர்ந்து கிளிநொச்சி, முல்லைதீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களிலும்முன்னெடுக்கப்படவுள் ளமை குறிப்பிடத்தக்கது.









# பாலஸ்தீனத்தை அங்கீகரிக்கும் கனடா! தமிழர் தாயகத்தை அங்கீகரிக்குமா?

● நவீனன்

(பிரான்ஸ், இங்கிலாந்துக்கு அடுத்ததாக பாலஸ்தீனத்தை அங்கீகரிக்க போகும் மூன்றாவது ஜி7 நாடாகிறது கனடா. தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்கு எப்போதும் ஆதரவாக கனடா இருக்கிறது. ஆனால் தமிழர்களது தாயக கோட்பாட்டை கனடா அரசு ஏற்றுக் கொள்ளுமா என்பது ஐயமே)

செப்ரெம்பரில் பாலஸ்தீனத்தை தனி நாடாக கனடா அங்கீகரித்துக் கொள்ளும் என்று கனடா பிரதமர் மார்க் கார்னி அறிவித்துள்ளார். பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்துக்கு அடுத்ததாகக் கனடாவும் இந்த முடிவை எடுத்துள்ளது. இதன்மூலம், அண்மையில் இந்த முடிவை எடுக்கும் மூன்றாவது ஜி7 நாடாகக் கனடா திகழ்கிறது.

ஈழத்தில் தமிழ் இனப்படுகொலையின் எதிரொலியாக தமிழ் கனேடியர்கள் சுமக்கும் வலியை புரிந்து கொள்வதாகவும் கனடா பிரதமர் மார்க் கார்னி குறிப்பிட்டுள்ளார். தமிழர்களுக்கு எதிரான இனப் படுகொலைக்கான பொறுப்புக் கூறலை நோக்கிய உண்மை மற்றும் நீதிக்கான அழுத்தத்துக்கு சுயாதீனமான சர்வதேச முயற்சிகளை கனடா தொடர்ந்து ஆதரிக்கும் என்றும் கனடா பிரதமர் அண்மையில் தெரிவித்திருந்தார்.

பாலஸ்தீன மக்களின் சுயநிர்ணய உரிமைகளை உறுதி செய்யும் வகையில், கனடா அரசு தனிநாட்டு தீர்மானத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுத்துள்ளது. இதனைப் போல நீண்ட காலமாக தாயக சுயநிர்ணய உரிமைக்காக போராடும் தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு கனடா ஆதரவு அளிக்குமா என்பதில் பல கேள்விகள் எழுகின்றன.

ஆனாலும் நீண்டகால ஆயுத போராட்டத்துக்குப் பின்னர், 2009 முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் பின்னரும் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை இலங்கை அரசு மறுத்து வருகின்றது.

இந்த சூழலில் பாலஸ்தீன மக்களின் விடுதலை போராட்டம் சர்வதேச ரீதியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வரும் நிலையில், பல ஐரோப்பிய நாடுகளும் தங்களது நிலைப்பாட்டை மாற்றி வருகின்றன. குறிப்பாக ஐரோப்பிய நாடுகள் பாலஸ்தீன தனி அரசை எதிர்த்து வந்தன. ஆனால் இந்த நாடுகளே எதிர்வரும் செப்டம்பரில் தனியரசுக்கான ஆதரவை வழங்கி அங்கீகாரத்தை வலுப்படுத்த உள்ளன.

## பாலஸ்தீன - கனடா ஆதரவு

காசாவில் தொடரும் போரின் காரணமாக பாலஸ்தீனத்தை தனி நாடாக கனடா ஏற்றுக் கொள்ளும் என கனடா பிரதமர் மார்க் கார்னியும் அறிவித்துள்ளார். இதன்மூலம், அண்மையில் இந்த முடிவை எடுக்கும் மூன்றாவது ஜி7 நாடாகக் கனடா திகழ்கிறது.

ஜனநாயக சீர்த்திருத்தங்களை பாலஸ்தீன தேசிய ஆணையம் முன்னெடுக்க வேண்டும். ஹமாஸ் பங்கேற்பு இல்லாமல் அடுத்த ஆண்டு தேர்தல்களை நடத்த வேண்டும் என்ற நிபந்தனைகளை கனடா பிரதமர் மார்க் கார்னி விதித்துள்ளார். இருநூறுக்கும்



மேற்பட்ட முன்னாள் கனடிய தூதர்களும், பாஸலஸ்தீன அங்கீகாரத்தை ஆதரித்து கார்னிக்கு கடிதம் எழுதி யுள்ளனர்.

காசாவில் மனிதர்கள் வதைப்படுவது சகிக்க முடியாத அளவில் உள்ளது. அது மேலும் மேலும் மோசமடைந்தும் வருகிறது. அதே நேரத்தில், பாலஸ்தீனத்தை நிர்வகித்து வரும் பாலஸ்தீன தேசிய அணையம், தனது ஆட்சி முறையை திருத்தி, ஆயுதமில்லா நிலைமைக்கு உடன்பட வேண்டும் என்ற நிபந்தனையையும் பிரதமர் கார்னி விதித்துள்ளார்.

பாலஸ்தீன அதிபர் மஹ்மூத் அபாஸுடன் அதன் நிலை பற்றி பிரதமர் கார்னி பேசியதாகவும் தெரிவித் துள்ளார். தற்போதைய பாலஸ்தீன அரசு மேற்கு கரையை கட்டுப்படுத்தும் பத்தாஹ் கட்சியின் கீழ் இயங்குகிறது. காசா பகுதியில் ஹமாஸ் ஆதிக்கம் செலுத்துகிறது. 2006 இற்குப் பிறகு இந்த பகுதிகளில் தேர்தல் நடத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனாலும் கனடா எதிர்க்கட்சியான கன்சர்வேடிவ் கட்சி அரசின் இந்த முடிவை எதிர்த்துள்ளது. ஒக்ரோபர் ஏழில் நடந்த பயங்கரவாத நடவடிக்கைக்குப் பிறகு பாலஸ்தீனை அங்கீரிப்பது தவறான சமிக்ஞையை உலகுக்கு தருவதாக அக்கட்சி கூறி உள்ளது.

## காசாவில் பட்டினிக் கொடுமை

காசாவில் இந்த ஜூலை மாதத்தில் மட்டுமே 156 சிறுவர் பட்டினியால் உயிரிழந்துள்ளனர். பலரும் வாரக் கணக்காக தண்ணீர் அருந்தாமல், பல்வேறு உடல் உபாதைகளுக்கு ஆளாகியிருக்கின்றனர். உணவு, தண்ணீர் தேடிச் செல்லும் பலர் இஸ்ரேல் ராணுவத்தால் கொல்லப்பட்டுள்ளனர்.

காசாவின் நீர் நிலைகளில் இஸ்ரேல் ராணுவம் அத்துமீறி நுழைந்து அழித்து வருகிறது. காசாவில் மனிதாபிமான உதவிகள் சென்றடைவதைத் இஸ்ரேலிய இராணுவம் தடுத்து வருகிறது.

காசாவில் பட்டிச் சாவை நோக்கிய எலும்பும் தோலுமான பாலஸ்தீன குழந்தைகளின் புகைப்படங்கள் சமூக வலைத் தளங்களில் பகிரப்பட்டு நெஞ்சை உலுக்குகின்றன. உலகம் முழுவதிலும் பாலஸ்தீன மக்களின் கொடுமைகள் தொடர்ந்து கவனத்தை ஈர்த்து வருகின்றது.

இஸ்ரேல் வெளியுறவுத் துறை அமைச்சர் கனடாவின் இந்த

தொடர்ச்சி▼

# பாலஸ்தீனத்தை அங்கீகரிக்கும் கனடா! தமிழர் தாயகத்தை அங்கீகரிக்குமா?

தொடர்ச்சி▲

முடிவை கடுமையாக விமர்சித்துள்ளார். இது ஹமாஸுக்கு சாதகமான முடிவு என விமர்சித்துள்ள அவர், இது ஹமாஸுக்கு வழங்கப்படும் பரிசாகும் என்று எக்ஸ் சமூக தளத்தில் தெரிவித்துள்ளார்.

193 ஐ.நா. உறுப்பு நாடுகளில் 147 நாடுகள் பாலஸ்தீனத்தை இறையாண்மை உள்ள அரசாக தற்போது அங்கீகரித்துள்ளன.

### தமிழர் வலியை உணரும் கனடா பிரதமர்

தமிழர் தாயகத்தில் தமிழ் இனப்படுகொலையின் எதிரொலியாக தமிழ் கனேடியர்கள் சுமக்கும் வலியை புரிந்து கொள்வதாக கனடா பிரதமர் அண்மையில் தெரிவித்துள்ளார்.

தமிழர்கள் உட்பட அனைத்து சமூகங்களையும் கனடா ஆதரிக்கிறது.

தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலைக்கான பொறுப்புக்கூறலை நோக்கிய உண்மை மற்றும் நீதிக்கான அழுத்தத்துக்குச் சுயாதீனமான சர்வதேச முயற்சிகளை கனடா தொடர்ந்து ஆதரிக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கனடாவில் இனத்துவேச வெறுப்பை எதிர்க்கிறோம். அந்த வகையில், வணிக மற்றும் சமூகத் தலைவர்களாக இருந்து, எங்கள் சமூகத்தின் துடிப்பை மேம்படுத்துவது வரை கனடா வாழ் ஈழத்தமிழர்கள் பலரும் இணைந்து பணியாற்றி வருகின்றனர்.

கனடா நாட்டுக்குத் தமிழர்கள் செய்யும் மகத்தான பங்களிப்புகளை பாராட்டி, நன்றியுடன் ஏற்றுக்கொள்வதாக பிரதமர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

### கனடாவில் தமிழர் பங்களிப்பு

போரால் பாதிக்கப்பட்ட பல்வேறு புலம்பெயர் சமூகங்களைப் போன்று கனேடிய வாழ் தமிழர்களும் இலங்கை அரசின் நடவடிக்கைகளால் பாதிக்கப்படுகிறார்கள் என்பதைத் தான் ஏற்றுக்கொள்வதாக முன்னாள் கனேடிய பிரதமர் ஜஸ்டின் ரூடோ கடந்த ஆண்டு தெரிவித்திருந்தார்.

புலம்பெயர்ந்து கனடாவில் வசிக்கும் தமிழர்களைப் பாதுகாப்பதற்கு அவசியமான சகல நடவடிக்கைகளையும் முன்னெடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார். கனடாவில் வாழும் தமிழர்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் இலங்கை அரசால் அண்மைய காலங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் தலையீடுகள் தொடர்பில் ஜஸ்டின் ட்ரூடோவிடம் கண்டனம் தெரிவித்து இருந்தார்.

### கனடாவில் தமிழர் குடியேற்றம்

இந்தியா மற்றும் இலங்கையைப் பூர்வீகமாக கொண்ட தமிழர்கள் கனடாவில் தற்போது ஐந்து இலட்சத்துக்கும் அதிகமானோர் வாழ்ந்து வருகின்றனர். கனடாவின் ஒன்டாரியோ மற்றும் பிரிட்டிஷ் கொலம்பியா ஆகிய மாகாணங்களிலேயே அதிகளவில் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர். ஏனைய மாகாணங்களிலும் குறிப்பிடத்தக்களவு தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

1970 ஆம் ஆண்டு தொடங்கி 1980 ஆம் ஆண்டுக்குப் இடைப்பட்ட காலத்திலேயே கனடாவில் ஈழத் தமிழர்கள் குடியேற ஆரம்பித்தனர். ஈழத் தமிழர்களே கனடாவில் முதல் முதலில் குடியேற்றத்தின் மூலம் தமிழ் தேசிய உணர்வு கனடாவிலும் பரவ ஆரம்பித்தது.

இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டுப் போர், கனடா உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளை நோக்கி பெருமளவான இலங்கைத் தமிழர்கள் செல்வதற்கு காரணமாகவும் அமைந்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.






### கனடா அரசியலில் தமிழர் வகிபாகம்

கடந்த சில ஆண்டுகளில் கனடாவில் அரசியலை தீர்மானிக்கும் சக்திகளாக தமிழர்கள் மாறிவிட்டனர் என்றே தோன்றுகிறது. ரொறன்டோ, ஒன்டாரியோ, அல்பெர்டா போன்ற பல மாகாணங்களில் தமிழர்கள் கூட்டாக ஒரே பகுதியில் வசித்து வருவதுடன், அந்தப் பகுதிகளில் அரசியல் மட்டுமின்றி, அரசு இயந்திரத்திலும் தமிழர்கள் கோலோச்சி வருகின்றனர்.

தற்போது கனடா மத்திய அரசால் இரண்டு தமிழர்கள், முக்கிய இரண்டு அமைச்சு பதவிகளை வகித்து வருகின்றமையானது, கனடாவில் தமிழர்களின் ஆதிக்கத்துக்குச் சிறந்த உதாரணமாக அமைந்துள்ளது.

இந்தியாவைப் பூர்வீகமாக கொண்ட அனிதா ஆனந்த் மற்றும் இலங்கையை பூர்வீகமாக கொண்ட ஹரி ஆனந்தசங்கரி ஆகியோரே இவ்வாறு கனடா மத்திய அரசில் முக்கிய அமைச்சு பதவிகளை வகித்து வருகின்றனர். இவர்களுக்கு எல்லாம் முன்பு கனடாவின் முதல் மக்களவை உறுப்பினராக, ராதிகா சிட்சபேசன் தேர்வாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதேபோன்று, மாகாண மற்றும் நகர அரசியலிலும் இலங்கை மற்றும் இந்திய நாடுகளை பூர்வீகமாக கொண்ட தமிழர்கள், தமது பங்களிப்புக்களை பாரியளவில் வழங்கி வருகின்றனர். அத்துடன், கனடாவில் வாழும் தமிழர்கள், அனைத்து துறைகளிலும் தமது பங்களிப்புக்களை வழங்கி வருவதை அவதானிக்க முடிகின்றது.

குறிப்பாக அரசியல், சுய தொழில், வர்த்தக நடவடிக்கைகள், மருத்துவத் துறை, பொறியியலாளர்கள், கணக்காளர்கள் உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் தமது ஆதிக்கத்தையும், பங்களிப்பையும் தமிழர்கள் செலுத்தி வருகின்றனர்.

கனடாவில் வாழும் ஏனைய சமூகங்களுக்கு நிகராக, இந்திய மற்றும் இலங்கையை பூர்வீகமாக கொண்ட தமிழர்களும் வாழ்ந்து வலுவான நிலையில் இருக கிறார்கள்.

தற்போது பாலஸ்தீனத்தை அங்கீகரிக்க போகும் மூன்றாவது ஜி7 நாடாகிறது கனடா. தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு எப்போதும் ஆதரவாக கனடா இருக்கிறது. ஆனால் தமிழர்களது தாயக கோட்பாட்டை கனடா அரசு ஏற்றுக் கொள்ளுமா என்பது ஐயமே.

# யார் உண்மையான இந்தியர் என்பதை நீதிபதிகளால் தீர்மானிக்க முடியாது

## பிரியங்கா காந்தி தெரிவிப்பு

யார் உண்மையான இந்தியர் என்பதை உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தீர்மானிக்க முடியாது என்று காங்கிரஸ் எம்.பி. பிரியங்கா காந்தி தெரிவித்துள்ளார்.

ராகுல் காந்திக்கு எதிராக உச்ச நீதிமன்ற நீதிபதிகள் நேற்று முன்தினம் கண்டனம் தெரிவித்திருந்த நிலையில், பிரியங்கா காந்தி நேற்று இவ்வாறு கூறியுள்ளார்.




கடந்த 2022 செப்டம்பர் 7 ஆம் திகதி 'இந்திய ஒற்றுமை யாத்திரை'யை தொடங்கிய ராகுல் காந்தி, யாத்திரையின் இடையே 2022, டிசம்பர் 16 அன்று செய்தியாளர்களிடம் பேசும்போது,

"எல்லையில் 2,000 சதுர கிலோ மீற்றர் நிலத்தை சீனா ஆக்கிரமித்துள்ளது. கடந்த 2020 ஆம் ஆண்டில் லடாக் எல்லையில் கல்வான் பள்ளத்தாக்கில் இந்திய வீரர்களை, சீன இராணுவம் கொலை செய்தது. சமீபத்தில் அருணாச்சல பிரதேச எல்லையில் இந்திய ராணுவ வீரர்கள் மீது சீன இராணுவ வீரர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். இவை அனைத்தையும் நாட்டு மக்கள் கவனித்து கொண்டிருக்கின்றனர்." என்று தெரிவித்தார்.

ராகுல் காந்தியின் இந்த கருத்துக்கு எதிராக மத்திய பாதுகாப்புத் துறையின் எல்லை சாலைகள் அமைப்பின் முன்னாள் இயக்குநர் உதய் சங்கர் ஸ்ரீவத்சவா லக்னோவில் உள்ள எம்.பி, எம்.எல்.ஏக்களுக்கான நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

லக்னோ நீதிமன்ற வழக்கை எதிர்த்து அலகாபாத் உயர் நீதிமன்றத்தில் ராகுல் காந்தி வழக்கு தொடர்ந்தார். அதில், 'உள்நோக்கத்துடன் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதால், லக்னோ நீதிமன்ற வழக்கை ரத்து செய்ய வேண்டும்' என்று கோரி இருந்தார். இதை விசாரித்த அலகாபாத் உயர் நீதிமன்றம் கடந்த மே 29 ஆம் திகதி அவரது மனுவை தள்ளுபடி செய்தது.

இதை எதிர்த்து கடந்த ஜூன் 4 ஆம் திகதி உச்ச நீதிமன்றத்தில் ராகுல் காந்தி மேல்முறையீடு செய்தார். இந்த மனு நீதிபதிகள் தீபங்கர் தத்தா, அகஸ்டின் ஜார்ஜ் மசி அடங்கிய அமர்வு முன் விசாரணைக்கு வந்தது. அப்போது, "இந்தியாவின் 2 ஆயிரம் சதுர கிலோ மீற்றர் பரப்பளவை சீனா ஆக்கிரமித்துவிட்டதாக எந்த அடிப்படையில் கூறினீர்கள்? உங்களிடம் என்ன ஆதாரம் இருக்கிறது?" என நீதிபதிகள் கேள்வி எழுப்பினர். மேலும், "நீங்கள் உண்மையான இந்தியராக இருந்தால், இப்படி சொல்ல மாட்டீர்கள். எல்லையில் மோதல் நடந்து கொண்டிருக்கும்போது இப்படியா சொல்வது?" என கண்டித்தனர்.

இந்நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் அளித்த காங்கிரஸ் மூத்த தலைவரும் எம்பியுமான பிரியங்கா காந்தி வத்ரா,

"மிகுந்த மரியாதையுடன் உச்ச நீதிமன்ற நீதிபதிகளுக்குச் சொல்கிறேன், உண்யையான இந்தியர் யார் என்பதை அவர்கள் தீர்மானிக்க முடியாது.

கேள்வி கேட்பதும், சவால் விடுப்பதும் எதிர்க்கட்சித் தலைவரின் கடமை. எனது சகோதரர், இராணுவத்துக்கு எதிராக ஒருபோதும் எந்த கருத்தையும் சொல்ல மாட்டார். அவர் இராணுவத்தை மிகுந்த மரியாதையுடன் நடத்துகிறார். அவரது கருத்து தவறாக திரிக்கப்பட்டுள்ளது." என தெரிவித்துள்ளார்.

# நிமிஷா பிரியாவுக்கு மன்னிப்பு இல்லை!



மஹ்தி எனப்படும் ஏமன் குடிமகனை கொலை செய்த வழக்கில் மரண தண்டனை பெற்று, சிறைதண்டனை அனுபவித்து வரும் கேரள தாதியான நிமிஷாவுக்கு மன்னிப்பு வழங்க முடியாது என மஹ்தியின் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந்த விவகாரத்தில், சமரசம் அல்லது மத்தியஸ்தத்திற்கான எந்தவொரு முயற்சியையும் திட்டவட்டமாக நிராகரிப்பதாகவும் அவரது குடும்பத்தினர் குறிப்பிட்டுள்ளனர்.

இதுதொடர்பில், ஏமனின் சட்ட மா அதிபருக்கு கடிதம் ஒன்றையும் அவரது குடும்பத்தினர் எழுதியுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

நிமிஷா பிரியாவுக்கு, கடந்த ஜூலை 16 ஆம் திகதி நிறைவேற்றப்பட இருந்த மரண தண்டனை இறுதி நேரத்தில் திகதி குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப்பட்டது.

இதைக் குறிப்பிட்டு, மரண தண்டனை நிறைவேற்றுவதற்கான புதிய திகதியை விரைவாக நிர்ணயிக்க உத்தரவிட வேண்டுமென அவரது குடும்பத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஏமனின் இஸ்லாமிய ஷரியா சட்டத்தின்படி, பாதிக்கப்பட்ட குடும்பம் மன்னிப்பு வழங்குவது மட்டுமே நிமிஷாவை மரண தண்டனையில் இருந்து காப்பாற்றுவதற்கான ஒரே வழி என அவரை மீட்க முயற்சித்து வருபவர்கள் கூறிவந்த நிலையில், "சமரசத்திற்கு இடமில்லை" என்று மஹ்தி குடும்பத்தினர் அறிவித்துள்ளனர்.

# இந்திய - அமெரிக்க உறவில் விரிசல் : ரஷ்யா செல்கின்றார் அஜித் தோவால்




இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான உறவு விரிசலடைந்துள்ள நிலையில், இந்திய தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவால் ரஷ்யாவுக்குச் சென்றுள்ளார்.

இதனையடுத்து இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரும் ரஷ்யாவுக்குச் செல்லவுள்ளார்.

அஜித் தோவாலின் பயணம் முன் கூட்டியே திட்டமிடப்பட்ட ஒன்று என்றாலும், ரஷ்ய- இந்திய உறவு குறித்து அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் கருத்துகள் காரணமாக, இந்த பயணம் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

இந்தியாவின் ரஷ்ய எரிபொருள் இறக்குமதியை மையப்படுத்தி, அமெரிக்க ஜனாதிபதி, இந்தியாவுக்கு எதிராக அதிக வரியை விதிக்கும் எச்சரிக்கையை விடுத்து வருகிறார்.

எனினும் இந்தியா, அமெரிக்க ஜனாதிபதியின் செயற்பாடுகளுக்கு தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளது முன்னதாக, அமெரிக்காவே ரஷ்யாவிடம் இருந்து எரிபொருளை இறக்குமதி செய்யுமாறு தமக்கு ஆலோசனை வழங்கியதாக இந்திய வெளியுறவு பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.



# நீண்டகால உள்துறை அமைச்சர் அமித் ஷா! எல்.கே.அத்வானி சாதனையை முறியடித்தார்

இந்தியாவின் மிக நீண்ட கால உள்துறை அமைச்சர் என்ற பெருமையை அமித் ஷா பெற்றுள்ளார்.

பா.ஜ.க. மூத்த தலைவர் எல்.கே.அத்வானியின் முந்தைய சாதனையை அவர் முறியடித்தார். கடந்த 2019 ஆம் ஆண்டு மே 30 ஆம் திகதி முதல் நாட்டின் உள்துறை அமைச்சராக அமித் ஷா பதவி வகித்து வருகிறார். அவர் நேற்று 2,258 நாள்கள் (6 ஆண்டுகள் 68 நாள்கள்) பதவிக் காலத்தை முடித்து நாட்டின் மிக நீண்டகால உள்துறை அமைச்சர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

கடந்த 2019, ஓகஸ்ட் 5 ஆம் திகதி ஜம்மு காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப்படுவதை நாடாளுமன்றத்தில் அமித் ஷா அறிவித்தார். அதே ஆகஸ்ட் 5 ஆம் திகதி இந்த சாதனையை அவர் படைத்துள்ளார்.

இதற்கு முன் காங்கிரஸ் தலைவர் கோவிந்த் வல்லப பந்த், பா.ஜ.க. தலைவர் எல்.கே.அத்வானி ஆகியோர் மத்திய உள்துறை அமைச்சராக மிக நீண்ட காலம் பணியாற்றியுள்ளனர்.

எல்.கே.அத்வானி 2,256 நாள்கள் (1998 மார்ச் 19 முதல் 2004 மே 22 வரை) இப்பதவியில் இருந்தார். கோவிந்த் வல்லப பந்த் 6 ஆண்டுகள் 56 நாள்கள் (1955 ஜனவரி 10 முதல் 1961 மார்ச் 7 வரை) இப்பதவி வகித்தார். மத்திய உள்துறை அமைச்சராக அமித் ஷா முதன்முதலில் 2019, மே 30 ஆம் திகதி நியமிக்கப்பட்டார். 2024, ஜுன் 10 ஆம் திகதி அவர் அப்பொறுப்பில் மீண்டும் நியமிக்கப்பட்டார். கூடுதலாக, நாட்டின் முதல் கூட்டுறவு அமைச்சர் என்ற பெருமையையும் அவர் பெற்றுள்ளார்.

இதற்கு முன் பா.ஜ.க. தேசிய தலைவர், குஜராத் உள்துறை அமைச்சர் ஆகிய பொறுப்புகளை அமித் ஷா வகித்துள்ளார். சமீபத்திய என்.டி.ஏ. கூட்டத்தில் அமித் ஷாவின் பங்களிப்புகளை பிரதமர் நரேந்திர மோடி பாராட்டினார், மேலும் இந்திய வரலாற்றில் மிக நீண்ட காலம் உள்துறை அமைச்சராக பணியாற்றியதற்காக அவரை பாராட்டினார்.

# ரஷ்யாவிடம் தொடர்ந்து எரிபொருள் வாங்கும் இந்தியா மீது வரியை மேலும் உயர்த்துவேன்

## டொனால்ட் ட்ரம்ப் தகவல்



ரஷ்யாவிடம் தொடர்ந்து எரிபொருள் வாங்குவதால் இந்தியா மீதான வரியை மேலும் உயர்த்துவேன் என்று டொனால்ட் ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் மீண்டும் பதவியேற்ற பின், அமெரிக்காவுடன் வர்த்தகம் செய்யும் நாடுகள் மீது பரஸ்பரவரி விதிக்கப்படும் என கூறியிருந்தார்.

இதன் காரணமாக அமெரிக்காவுடனான வர்த்தக பேச்சுவார்த்தையில் உடன்பாடு எட்டப்படவில்லை. அமெரிக்காவுக்கு ஓராண்டில் 8,650 கோடி இந்திய ரூபா அளவுக்கு இந்தியா ஏற்றுமதி செய்கிறது. இவற்றில் மருந்து பொருள்கள், எரிசக்தி, கனிமங்கள், இலத்திரனியல் பொருள்களுக்கு வரிவிலக்கு உள்ளது.

ரஷ்யாவிடம் இருந்து இந்தியா அதிகளவில் கச்சா எண்ணெய் இறக்குமதி செய்வதாக கூறிய ட்ரம்ப் இதன் மூலம் உக்ரைனுக்கு எதிரான ரஷ்யாவின் போருக்கும் இந்தியா நிதி அளிக்கிறது என குற்றம் சாட்டினார்.

இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களுக்கு நாளை முதல் 25 வீத வரி விதிக்கப்படும் என ஜனாதிபதி ட்ரம்ப் ஏற்கெனவே கூறியிருந்தார்.

இந்நிலையில் ட்ரம்ப் நேற்று அளித்த பேட்டியில்,

"வர்த்தகம் செய்வதற்கு ஏற்ற நல்ல நாடாக இந்தியா இல்லை. ஏனென்றால், இந்தியா அமெரிக்காவுக்கு ஏராளமான பொருள்களை ஏற்றுமதி செய்கிறது. ஆனால், அமெரிக்காவிடம் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு இந்தியா மிக அதிக வரியை விதிக்கிறது. இதனால் இந்தியாவில் அமெரிக்க பொருள்களை விற்க முடியவில்லை. அதனால் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு 25 வீத வரி விதிக்கப்பட்டது. ஆனால், அடுத்த 24 மணி நேரத்தில் வரியை மேலும் உயர்த்த உள்ளேன்." என்று குறிப்பிட்டுள்ளார்.



## சீனாவில் PhD படிக்கும் மனித உருவ ரோபோ

சீனாவில் மனித உருவ "ரோபோ" ஒன்று, அந்நாட்டின் பாரம்பரிய கலையான நாட்டியம் மற்றும் நாடகத் துறையில் கலாநிதி பட்டம் பெறுவதற்கான, பி.எச்.டி கற்கை நெறியில் சேர்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஏ.ஐ. எனப்படும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் உலகில் வேகமாக வளர்ந்து வருகிறது.

அதிலும் ரோபோக்களை உருவாக்கி அதில், ஏ.ஐ. தொழில்நுட்பத்தைப் புகுத்தி, கல்வி நிலையங்கள், தொழிற்சாலைகள், விடுதிகள் என பல்வேறு துறைகளில் பயன்படுத்த ஆரம்பித்துள்ளனர்.

இந்நிலையில், சீனாவின் ஷாங்காய் தியேட்டர் அகாடமியில், மனித உருவிலான ரோபோ ஒன்று, அந்த நாட்டின் பாரம்பரிய நாட்டியம் மற்றும் நாடகத் துறையில் கலாநிதி பட்டம் பெறுவதற்காக அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஏ.ஐ , கலைஞர் என்று வர்ணிக்கப்படும், "எக்ஸ்யூபா -01" என்ற அந்த ரோபோ, அழகான ஆணின் தோற்றத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

புகழ்பெற்ற ஷாங்காய் கலைஞரான பேராசிரியர் யாங் கிங்கிங்கின் வழிகாட்டுதலின் கீழ், செப்டம்பர் 14 இல் இந்த ரோபோ தன் கல்விப் பயணத்தை ஆரம்பிக்கிறது.

மேடை நிகழ்ச்சி, திரைக்கதை எழுதுதல், மொழி உருவாக்கம் உட்பட பல்வேறு பாடத் திட்டங்களை இந்த ரோபோ கற்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 400 பேர் வாழ சிறிய நாடு!

## உருவாக்கினார் ஆஸி. இளைஞர்



அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த 20 வயது இளைஞன் ஒருவர், குரோஷியா -செர்பியா நாடுகளுக்கிடையே வெர்டிஸ் என்ற சிறிய நாட்டை உருவாக்கியுள்ளார் என தி நியூயார்க் போஸ்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

மேற்படி இளைஞன், குரோஷியாவிற்கும், செர்பியாவிற்கும் இடையிலான, டானூப் ஆற்றின் குறுக்கே 125 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள, உரிமை கோரப்படாத நிலத்தை, வெர்டிஸ் குடியரசு நாடாக அறிவித்து, அதன் ஜனாதிபதி நான் தான் என தனக்கு தானே அறிவித்துள்ளார்.

அதன் கொடி, அமைச்சரவை, நாணயம் மற்றும் 400 குடிமக்களைக் கொண்டுள்ள இந்த சிறிய நாடு, இப்போது இத்தாலியில் உள்ள வத்திக்கான் நகரத்திற்குப் பின், உலகின் இரண்டாவது சிறிய நாடாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

மேலும், இதன் அதிகாரப்பூர்வ மொழிகள் ஆங்கிலம், குரோஷியன் மற்றும் செர்பியன் என அறிவிக்கப்பட்டுள்ளதாக தி நியூயார்க் போஸ்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

பக்கங்கள் - 03

கனடா முரசு

புதன்கிழமை 06/08/2025

## சர்வதேச சட்டங்களை இஸ்ரேல் மீறுகின்றது

கனடா குற்றச்சாட்டு






# கனடாவில் திறக்கப்பட்டுள்ள காலிஸ்தான் இயக்கத் தூதரகம்

## எழுந்துள்ள பாரிய சர்ச்சை




கனடாவின் சீக்கிய குருத்வாரா வளாகத்தில் காலிஸ்தான் தூதரகம் திறக்கப்பட்டுள்ளமை பாரிய சர்ச்சையை கிளப்பி உள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தியாவில் காலிஸ்தான் இயக்கம் ஒடுக்கப்பட்டதால், வட அமெரிக்க நாடான கனடா மற்றும் அமெரிக்காவில் இருந்து அதன் ஆதரவாளர்கள் செயல்பட்டு வருகின்றனர்.

குறிப்பாக கனடாவில் இந்த பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்தவர்கள், இந்தியாவுக்கு எதிராக செயல்பட்டு வருகின்றனர்.

C2 ▶

# கனடாவில் கல்வி கற்பதற்கு விண்ணப்பிக்கும் சர்வதேச மாணவர்களின் எண்ணிக்கை வீழ்ச்சி





கனடாவில் கல்வி கற்க விண்ணப்பிக்கும் சர்வதேச மாணவர்கள் எண்ணிக்கையில் கடும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடாவில் கல்வி கற்கச் செல்லும் சர்வதேச மாணவர்களில் அதிகம் பேர் இந்திய மாணவர்களாக காணப்படுகின்றனர்.

இந்நிலையில், கனேடிய அரசியல்வாதிகள் இந்திய மாணவர்களைக் குறிப்பிட்டுச் சொல்லியே கனடாவில் வீடு பற்றாக்குறை போன்ற விடயங்களுக்கு அவர்கள் காரணம் என சாடியும் உள்ளனர்.

இவ்வாறான பின்னனியில், இந்திய மாணவர்கள் பலர் கனடாவை புறக்கணிக்க ஆரம்பித்துள்ளனர் என தகவல் வெளியாகி வருகிறது.

சர்வதேச மாணவர்களுக்குக் கட்டுப்பாடுகள் விதித்த கனடாவின் புலம்பெயர்தல், அகதிகள் மற்றும்

C2 ▶

# சர்வதேச சட்டங்களை இஸ்ரேல் மீறுகின்றது

## கனடா குற்றச்சாட்டு





காசாவிற்குள் வான்வழியாக மனிதாபிமான உதவிகளை வீசியுள்ள கனடா, இஸ்ரேல் சர்வதேச சட்டங்களை மீறுகின்றது என குற்றம்சாட்டியுள்ளது.

சிசி - 130 ஜே ஹேர்குலிஸ் விமானத்தை பயன்படுத்தி கனடாவின் ஆயுதப்படையினர் காசாவுக்குள் மனிதாபிமான உதவி பொருள்களை போட்டனர் என தெரிவித்துள்ள கனடா அரசாங்கம் 21600 பவுண்ட் மனிதாபிமான உதவிகளை போட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

கனடாவின் ஆயுதப்படையினர் தங்கள் விமானங்களை பயன்படுத்தி முதல் தடவையாக காசாவுக்குள் மனிதாபிமான பொருட்களை போட்டுள்ளனர் என கனடா ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை கனடா எகிப்து உட்பட ஆறுநாடுகள் 120 உணவுப்பொதிகளை காசாவிற்குள் வீசியுள்ளன என எகிப்து தெரிவித்துள்ளது.

இதேவேளை, இஸ்ரேலின் கட்டுப்பாடுகள் மனிதாபிமான அமைப்புகளிற்கு சவாலை தோற்றுவித்துள்ளன என தெரிவித்துள்ள கனடா, மனிதாபிமான உதவிகளை தடுப்பது சர்வதேச சட்டங்களை மீறும் செயல் எனவும் இதனை உடனடியாக முடிவுக்கு கொண்டு வரவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

---

### கனடாவில் திறக்கப்பட்டுள்ள...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தநிலையில், ஹிந்து கோவில்கள் மீது தாக்குதல் மற்றும் இந்தியர்கள் மீது தாக்குதல்களில் இவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆனால், அரசியல் இலாபத்துக்காக, காலிஸ்தான் பயங்கரவாதிகள் மீது எந்த நடவடிக்கையும் கனடா அரசாங்கம் எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டு உள்ளது.

இந்தநிலையில், அதை மெய்ப்பிக்கும் வகையில், காலிஸ்தான் குடியரசு என்று எழுதப்பட்ட பலகையுடன் கூடிய தூதரகம் ஒன்று, சர்ரே பகுதியில் உள்ள குருத்வாரா வளாகத்தின் ஒரு கட்டடத்தில் திறக்கப்பட்டுள்ளது.

தூதரகம் அமைக்கப்பட்டுள்ள கட்டடம் பிரிட்டிஷ் கொலம்பியா அரசாங்கத்தால் வழங்கப்பட்ட நிதியில் கட்டப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

### கனடாவில் கல்வி கற்பதற்கு...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குடியுரிமை அமைப்பு, 2024 ஆம் ஆண்டில் முந்தைய ஆண்டில் வழங்கப்பட்ட கல்வி அனுமதிகளைவிட 35 சதவிகிதம் குறைத்து, 364,000 கல்வி அனுமதிகளை மட்டுமே வழங்க முடிவு செய்திருந்தது.

ஆனால், மாணவர்கள் கனடாவைப் புறக்கணிக்க முடிவு செய்ததால், முந்தைய ஆண்டைவிட கனடாவில் கல்வி கற்க விண்ணப்பித்த சர்வதேச மாணவர்கள் எண்ணிக்கை 48 சதவிகிதம் குறிந்து விட்டது.

அதாவது, 364,000 கல்வி அனுமதிகளை மட்டுமே வழங்க கனடா திட்டமிட்டிருந்த நிலையில், 2024ஆம் ஆண்டில் எதிர்பார்த்ததைவிட 100,000 பேர் குறைவாக கல்வி அனுமதிக்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

ஆம், 267,890 பேர் மட்டுமே கனடாவில் கல்வி கற்க அனுமதி கோரி விண்ணப்பித்துள்ளார்கள். ஏனென்றால், இவ்வளவு மாணவர்கள் கனடாவை புறக்கணித்ததால், கனடாவில் சுமார் 10,000 பேர் கல்வித்துறையில் வேலை இழந்துள்ளார்கள்.

பல கல்லூரிகள் இயங்க இயலாமல், பல பாடப்பிரிவுகளுக்கு போதுமான மாணவர்கள் இல்லாமல் திணறிக் கொண்டிருக்கின்றன.

சர்வதேச மாணவர்கள் வழங்கும் கல்விக்கட்டணம் இல்லாததால் ஏற்பட்டுள்ள நிதி இழப்பை சமாளிக்க உதவுமாறு The Ontario Public Service Employees Union (OPSEU) என்னும் அமைப்பு அரசாங்கங்களுக்கு தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருவதிலிருந்து, சர்வதேச மாணவர்களின் இழப்பு கனடாவில் கல்வித்துறை மீது எவ்வித தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை தெளிவாகப் புரிந்துகொள்ளலாம்.



# மெக்ஸிக்கோவுடன் உறவுகளை வலுப்படுத்துகிறது கனடா அரசு

அமெரிக்காவுடனான உறவுகளில் விரிசல் ஏற்பட்டுள்ள நிலையில் மெக்ஸிக்கோவுடனான உறவுகளை வலுப்படுத்திக்கொள்ள கனடா முனைப்பு காட்டி வருகின்றது.

கனடிய வெளிவிவகார அமைச்சர் அனிதா ஆனந்த் மற்றும் நிதி அமைச்சர் பிரான்ஸ்வா-பிலிப் ஷாம்பெய்ன் ஆகியோர் மெக்ஸிக்கோவிற்கு விஜயம் செய்துள்ளனர்.


ஆனந்த் மற்றும் ஷாம்பெய்ன், மெக்ஸிகோ ஜனாதிபதி கிளாடியா ஷைன்பாமுடனும் ஏனைய முக்கியஸ்தர்களுடனும் சந்திப்பு நடத்தியுள்ளனர்.

கனடாவும் மெக்ஸிகோவும் துறைமுகங்களுக்கு இடையிலான வர்த்தகப் பாதைகள், செயற்கை நுண்ணறிவு, டிஜிட்டல் பொருளாதாரம் மற்றும் எரிசக்தி பாதுகாப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்தும் ஒரு பணித் திட்டத்தை உருவாக்க இணங்கப்பட்டுள்ளதாக அனிதா ஆனந்த் தெரிவித்துள்ளார்.

ஆனந்த் மற்றும் ஷாம்பெய்ன் செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி ஷைன்பாமை சந்தித்ததுடன், இன்றைய தினம் வணிகத் தலைவர்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த உள்ளனர்.

அமெரிக்கா கனடா மீது தொடர்ச்சியாக வரிகளை அதிகரித்து வரும் பின்னணியில் மெக்ஸிக்கோவுடன் உறவுகளை வலுப்படுத்திக்கொள்ள கனடா தீவிர முனைப்பு காட்டி வருகின்றது.





# கல்கரியில் விபத்து; சிறுமி பலி





கனடாவின் கல்கரியில் வாகனம் மோதியதில் இரண்டு வயது சிறுமி உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் டாரடேல் டிரைவ் வடகிழக்கு 600 தொகுதியில் இடம்பெற்றுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

சிறுமி உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

நோயாளர் காவுவண்டி குழந்தைகள் மருத்துவமனையை விரைவாக அடைய உதவுவதற்காக பொலிஸார் பல சந்திப்புகளை மூடினர், ஆனால் சிறுமி பாரிய காயங்கள் காரணமாக உயிரிழந்தார்.

வாகனத்தின் ஓட்டுநர் சம்பவ இடத்தில் இருந்து தப்பியோடாமல் இருந்து, பொலிஸாரின் விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கினார் என தெரிவிக்கப்படுகின்றது.

குடிபோதையில் இந்த விபத்து இடம்பெறவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறெனினும் விபத்துக்கான காரணங்கள் தொடர்பில் பொலிஸார் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.